**02/08/2023**

**OS. No. 57/2022**

**வா.சா.1.குமாரி**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிறந்தது வளர்ந்தது பனையபுறம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வரதராஜனுக்கும் சட்டப்படியான மனைவி காலாவிற்கும் பிறந்தவர் என்றால் சரிதான். வரதராஜனின் உடன் பிறந்தவர் கோவிந்தசாமி என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு என்னுடைய சகோதரி பத்மாவதியை திருமணம் செய்துக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் என்னுடைய அக்காவை கோவிந்தசாமிக்கு திருமணம் செய்துக்கொடுத்துள்ளதால் அவர்களுடைய வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம் என்றால் இல்லை. அவ்வாறு நான் அடிக்கடி சென்றதால் வரதராஜனிடம் பழக்கம் ஏற்பட்டு சட்டவிரோதமாக திருமணம்செய்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. வரதராஜனின் மனைவி கலா 1976 ல் இறந்துவிட்டார் என்பதற்கு அவருடைய இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை.

1 ம் பிரதிவாதி குழந்தையாக இருந்ததால் அவரை பராமரிப்பதற்காக வரதராஜன் என்னை திருமணம் செய்யும் போது அவருடைய குடும்ப சொத்தை எனக்கு கொடுக்கவில்லை. கலா 1976 ல் இறக்கவில்லை என்றாலும் 1986 ல் 1 ம்பிரதிவாதி 5ம் வகுப்பு படிக்கும் போது கலா இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி கலாவிற்கும் வரதராஜனுக்கும் 15.02.1977 ல் தான் பிறந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பிறந்தபிறகு 1 வயது இருக்கும் போது வரதராஜன் என்னை திருமணம் செய்துகொண்டார். வரதராஜனின் முதல் மனைவி கலா உயிருடன் இருந்தபோது வரதராஜன் என்னை திருமணம் செய்துக்கொண்டதால் நான் சட்டப்படியான மனைவி இல்லை என்றால் சரியல்ல. கலா இறந்தபிறகு தான் என்னை திருமணம் செய்துகொண்டார்.

கலா இறந்தபிறகு தான் என்னை திருமணம் செய்துகொண்டார் என்பதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான். 2ம் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி ஆகியோர்கள் மட்டும் தான் வரதராஜனுக்கு வாரீசுகள் என்றாலும் நான் சட்டப்படியான வாரீசு இல்லை என்றால் சரியல்ல. வரதராஜன் என்னை சட்டவிரோதமாக திருமணம் செய்துகொண்டதால் மன விரத்தி அடைந்து கலா கீழ்கொடுங்காலுருக்கு சென்று 1986 ல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை அவருடைய பாட்டிதான் படிக்கவைத்தார் என்றால் சரியல்ல. இந்து வாரீசு உரிமை சட்டத்தின் படி நான் வரதராஜனின் வாரீசு இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடைய கணவர் 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனக்கும் வரதராஜனுக்கும் 1977 ல் திருமணம் நடந்தது. மாதம், தேதி ஞாபகம் இல்லை. எனக்கு 2ம் வாதி வாரீசு. என்னுடைய கணவரின் முதல் மனைவி 1976 ல் இறந்துவிட்டார். நான் வேறு எந்த நீதிமன்றத்திலும் வாரீசு சான்று கேட்டு வழக்கு போடவில்லை. 2,3 பிரதிவாதிகளை பொறுத்து நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.என்னுடைய கணவருக்கும் கலாவிற்கும் பிறந்தவர்தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.